

நடைபெற்று முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் ஆலந்தூர் தொகுதியில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் தா.மோ. அன்பரசன் கண்டோன்மெண்ட் நகரத்தில் தேர்தல் பணியாற்றிய கழக நிர்வாகிகளுக்கும் இயக்கத் தோழர்களுக்கும் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். அருகில் நகர செயலாளர் டி. பாபு, பகுதிச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### உதவி ஆய்வாளரை சுட்டு விட்டு தப்பியோட முயற்சி:

# ரவுடியை துப்பாக்கியால் சுட்டுப் பிடித்த போலீஸார்!

தூத்துக்குடி, மே 10-

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே போலீஸாரை நாட்டு துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பியோட முயன்ற பிரபல ரவுடியை, போலீஸார் துப்பாக்கியால் சுட்டு பிடித்தனர்.

தூத்துக்குடி மினி சகாயபுரம் பகுதியைச் சேர்ந்தவர் ஆர்க் என்ற மரிய அந்தோனி (35). இவர் மீது தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பல்வேறு காவல் நிலையங்களில் கொலை, கொலை முயற்சி, கொள்ளை உள்ளிட்ட சுமார் 30 வழக்குகள் உள்ளன. இவரை போலீஸார் தீவிரமாக தேடி வந்தனர்.

இந்நிலையில் திருச்செந்தூர் அருகே உள்ள சோனகன் விளை காணியாளன்புதூரில் ஒரு வீட்டில் மரிய அந்தோனி தங்கி இருப்பதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. உதவி ஆய்வாளர் ராஜ பிரபு தலைமையிலான தனிப்படை போலீஸார் நேற்று முன்தினம் மதியம் காணி யாளன்புதூரில் உள்ள வீட்டில் இருந்த மரிய அந்தோணியை பிடிக்க முயன்றனர்.

அப்போது, அவர் தன்னிடம் இருந்த நாட்டு துப்பாக்கியால் உதவி ஆய்வாளர் ராஜ பிரபுவை சுட்டுவிட்டு தப்பித்து ஓட முயன்றுள்ளார். உடனே உஷாரான உதவி ஆய்வாளர் தன்னிடம் இருந்த துப்பாக்கியால் சுட்டதில் மரிய அந்தோனியின் வலது மார்புக்கும் வயிற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் குண்டு பாய்ந்தது.

இதனால் காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்தார். போலீஸார் அவரை உடனடியாக திருச்செந்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு முதலுதவி அளிக்கப்பட்ட பின்னர் மேல் சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மரிய அந்தோணி நாட்டு துப்பாக்கியால் சுட்டதில் காயமடைந்த உதவி ஆய்வாளர் ராஜ பிரபுவும் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். அவரை எஸ்.பி.மதன் பார்த்து நலம் விசாரித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்ததாவது: மரிய அந்தோனி மீது சுமார் 30 வழக்குகள் உள்ளன. தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலையம் மீது வெடிகுண்டு வீசிய வழக்கில் அவர் கைது செய்யப்படாமல் தலைமறைவாக இருந்தார். இந்த வழக்கு தொடர்பாக அவரை பிடிக்க முயன்ற போது தான் நாட்டு துப்பாக்கியால் எஸ்ஐ ராஜபிரபுவை மரிய அந்தோணி சுட்டுவிட்டு தப்பியோட முயன்றார்.

இதை தொடர்ந்து தனது உயிரை பாதுகாக்க சட்ட விதிகளுக்கு உட்பட்டு எஸ்.ஐ. தனது துப்பாக்கியால் ஒரு ரவுண்டு சுட்டுள்ளார். இது தொடர்பாக திருச்செந்தூர் தாலுகா போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் என்றார்.

### சென்னை ரயில்வே கோட்டத்தின்

# 21 நிலையங்களில் மின்வாகன பேட்டரி மாற்றும் வசதி!

சென்னை, மே 10-

மின்சார வாகன உள்கட்டமைப்புக்கான தேவையைக் கருத்தில் கொண்டு, சென்னை ரயில்வே கோட்டத்தின் 21 புறநகர் ரயில் நிலையங்களில் மின்சார வாகன பேட்டரி மாற்றும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், ரயில்வே நிர்வாகத்துக்கு ஆண்டுக்கு ரூ.53.43 லட்சம் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தெற்கு ரயில்வேயில் சென்னை ரயில்வே கோட்டத்தின் நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில், மத்திய அரசு மற்றும் ரயில்வே வாரியத்தின் பசுமைப் போக்குவரத்து கொள்கையின்படி, கார்பன் உமிழ்வைக் குறைக்கவும் மின்சார வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கவும் சென்னை முழுவதும் உள்ள முக்கிய புறநகர் ரயில் நிலையங்களில் மின்சார வாகனங்களுக்கான பேட்டரி மாற்றும் நிலையங்களை அமைக்கும் பணியைத் தொடங்கியுள்ளது.

இந்த பேட்டரி மாற்றும் நிலையங்களை நிறுவி இயக்குவதற்காக 5 ஆண்டுகளுக்கு மொத்தம் 21 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் ரயில்வே நிர்வாகத்துக்கு ஆண்டு உரிமக் கட்டணமாக ரூ.53.43 லட்சம் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இத்தகைய வசதிகளை பயணிகள் வருகை அதிகம் உள்ள நிலையங்களில் விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியதாவது: பயணிகள் வருகை அதிகமுள்ள ரயில் நிலையங்களில், மின்சார வாகன பேட்டரி மாற்றும் வசதி ஏற்படுத்தப்படுகிறது.

அந்த வகையில், சென்னை சென்ட்ரல், அண்ணனூர், பசுமை வழிச்சாலை, கொரட்டூர், கோட்டூர்புரம், சிந்தாதிரிப்பேட்டை, முண்டகக்கண்ணி அம்மன் கோவில், கோடம்பாக்கம், மந்தைவெளி, சென்னை எழும்பூர், திருவல்லிக்கேணி, திருமயிலை, பெருங்குடி, பல்லாவரம், சைதாப்பேட்டை, பரங்கிமலை, தரமணி, திருவான்மியூர், வேளச்சேரி, வில்லிவாக்கம், வண்ணாரப்பேட்டை ஆகிய 21 புறநகர் ரயில் நிலையங்களில் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த பேட்டரி மாற்றும் முறை, மின்சாரம் தீர்ந்த பேட்டரிகளை மிகக் குறுகிய காலத்துக்குள் முழுமையாக சார்ஜ் செய்யப்பட்ட பேட்டரிகளாக மாற்றிக் கொள்ள வழிவகை செய்கிறது. அங்கீகரிக்கப்பட்ட சார்ஜ் பாயின்ட் ஆபரேட்டர்களின் (CPOs) மொபைல் செயலிகள் மூலம் இந்த வசதியை எளிதாகப் பயன்படுத்த முடியும்.

ஒப்பந்தத்தின்படி, உரிமம் பெற்ற நிறுவனங்களே இந்த வசதிகளை நிறுவி இயக்கி, பராமரிக்கும் பொறுப்பை ஏற்கும். ரயில்வே நிர்வாகம் நிலைய வளாகத்துக்குள் அதற்கான இடத்தை வழங்கும். இந்த வசதியை ஏற்படுத்த மிகக் குறைந்த இடத்தையே எடுத்துக்கொள்வதால், பயணிகளுக்கு எந்த இடையூறும் ஏற்படாது.

லட்சக்கணக்கான பயணிகள் பயணிக்கும் சென்னை கோட்டத்தின் புறநகர் ரயில் நிலையங்களில் அமைக்கப்படும் இந்த வசதி, மின்சார வாகனங்களைப் பயன்படுத்துபவர்களுக்கு உதவியாக அமையும். இந்த வசதியை விரிவுபடுத்த, கூடுதல் இடங்களை அடையாளம் கண்டு வருகிறோம் என்று அவர்கள் கூறினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வை. மகாவிஷ்ணு

### மே 10 (2007)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

திருவொற்றியூர் நகரத்தில் தொடர்ந்து முப்பதாண்டுகள் வட்டச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

திருவொற்றியூர் நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

1987 இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம், 1991 ரயில் மறியல் போராட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தமிழ்நாட்டிலும் இனி முடியப் போகிறது காங்கிரஸ்!

**சௌமியன் வைத்தியநாதன்**
கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்



சற்று நிதானமாகவே யோசிப்போம்...

திரிபுராவில் துவங்கி, பா.ஜ.க. தான் ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்தல் முடிவுகள் வந்த பிறகு, மிக மிக மோசமான குதிரை பேரங்களில் இறங்கி...

யாரை, யாருடன் எப்படி வேண்டுமானாலும் சேர்த்து அல்லது பிரித்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி ஒவ்வொரு மாநிலமாகப் பிடித்து வருகின்றது.

பா.ஜ.க.வின் அந்த போக்கினை இந்தியாவில் இருக்கின்ற காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து கட்சிகளுமே கடுமையாக விமர்சித்தும் வருகின்றன.

ஆனால் இன்றைக்கு சாப்பிட்டு கழுவிய கை காய்வதற்குள்ளாகவே, ரத்தமும் சதையுமாக ஒரு மானசீக மனக்கொலையை செய்து முடித்திருக்கிறது காங்கிரஸ். இதை நான் குற்றம் சொல்லவில்லை. 2026 தேர்தலுக்கு மட்டும் தான் கூட்டணி என்று மாணிக்தாக்கூர் சொல்கிறார்.

இருக்கட்டும்... காங்கிரஸ் ஒரு வேளை தனிப் பெரும் கட்சியாக உருவெடுத்து, ஆட்சி அமைக்க சொற்ப எண்ணிக்கையிலான எம்.எல்.ஏக்கள் தேவை என்ற நிலை ஏற்பட்டிருந்தால்... அப்பொழுது இது மாதிரியாக எம்.எல்.ஏ.க்களை குதிரைபேரத்தில் ஈட்டி ஆட்சி அமைத்திருந்தால், அதைக்கூட வேறு என்ன வழியிருக்குன்னு ஏற்றுக்கொண்டு சமாதானமாகிப் போயிருக்கலாம்.

ஆனால், ரெண்டே ரெண்டு அமைச்சர் பதவிக்காக இதயத்தை (அப்படி ஒன்று அவர்களுக்கு இருந்தால்) அறுத்துப் போட்டு விட்டு, பனையூர் படியேறி நிற்கின்றீர்கள்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், மோடிக்கு அரசமைக்க தி.மு.க.வின் தயவு தேவைப்பட்ட பொழுது, தி.மு.க. அது பற்றி சிந்திக்கக் கூட இல்லை. அதுகூட பரவாயில்லை, கொஞ்சம் அட்ஜெஸ்ட் பண்ணுங்க, நீங்க கேட்டதை எல்லாம் தருகின்றோம் என்று சாம பேத தண்ட வழிமுறைகளில் பா.ஜ.க. நெருக்கிய போதும் தி.மு.க. தளரவில்லை.

மாறாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், பா.ஜ.க. கொண்டு வர நினைத்த... இறையாண்மைக்கு எதிரான, சமூகநீதிக்கு எதிரான, மதவாதத்திற்கு எதிரான பல்வேறு மசோதாக்களை எதிர்த்து மிகக் காத்திரமாக தி.மு.க. களமாடிக் கொண்டிருக்கின்றது.

நீங்கள் எங்களுடன் கூட கூட்டணி வைக்க வேண்டாம், காங்கிரஸை மட்டும் தள்ளி வையுங்கள் என்று பா.ஜ.க. எவ்வளவோ முறை மறைமுகமாக தூது விட்டாலும் கூட அவற்றை பொருட்படுத்தாமல் உங்கள் இயக்கத் தலைவரை பிரதமர் வேட்பாளராக அறிவித்ததே தி.மு.க....?! உங்களால் தி.மு.க.வுக்கு ஏதேனும் அதிகாரமோ பலன்களோ கிடைத்த காரணத்தினாலா..?! உங்களை தொடர்ந்து ஆதரித்ததால் தி.மு.க. பெற்றது எல்லாம் அவதூறுகளும், அடங்கா துயரங்களும் மட்டும் தானே..?!

தமிழ்நாட்டில் காவி வாதம் வந்துவிடக் கூடாது என்ற ஒற்றைக் காரணத்திற்காகவே... ஈழப்பிரச்சினை, 2ஜி என்று பல்வேறு பழிகளை சம்பந்தமே இல்லாமல் தி.மு.க. உங்களுக்காக தாங்கி நின்றதே..?!

தேர்தலுக்கு முன்பாகவே தி.மு.க. தலைவர், தொகுதி எண்ணிக்கையையும், ஆட்சி அதிகாரத்தில் பங்கில்லை என்பதையும் தெள்ளத் தெளிவாகச் சொல்லி விட்டாரே? அதில் உங்களுக்கு ஒரு சதவிகிதம் உடன்பாடு இல்லை என்றாலும் அப்பொழுதே வெளியேறியிருக்கலாமே..?! யார் உங்கள் கையைப் பிடித்து இழுத்தது..?!

மிகப் பலமான சந்தேகம் ஒன்று இங்கே உலா வரத் துவங்கியிருக்கின்றது. தி.மு.க. கூட்டணியில் இருந்து கொண்டே, வேறு ஒரு அணியை த.வெ.க. வுடன் மிகத் தீர்க்கமாக முடித்து வைத்திருக்கின்றீர்கள் என்பது தான் அது..?!

ஆம்.. இன்றைக்கு கிரிஷ் சோடங்கர், புதிய எம்.எல்.ஏ.க்கள் மற்றும் பிரவீன் சக்ரவர்த்தி எல்லாம் விஜய்யோடு நின்று பேசுவதைப் பார்த்தால், புதிய உறவாகத் தெரியவில்லை, மாறாக நீங்கள் த.வெ.க. தலைமையோடு மிக மிக நெருக்கமான உறவோடு இருந்திருக்கின்றீர்கள் என்று பலமாக நம்பத் தோன்றுகின்றது.

உங்களுடைய ஒரு வாக்கு கூட ஒரு தி.மு.க. வேட்பாளருக்கு கூட விழவில்லை. உங்களால் கட்டமைக்கப்படும் சிறுபான்மையினர் வாக்குகளும் கூட பெரும்பான்மையாக உங்கள் தலைவர் வெளிப்படையாக விஜய்க்கு ஆதரவானவராக காட்டிக் கொண்ட காரணத்தாலும், தி.மு.க. தலைவரோடு பேசவோ, மேடையேறவோ மறுத்து அவர் எண்ணங்களை வெளிப்படுத்திய காரணங்களாலும் தவெகவுக்கே சென்றுள்ளது.

திட்டமிட்டு தி.மு.க.வை வீழ்த்தவே, தி.மு.க.வோடு வெளிப்படையாக கூட்டணியில் இருந்து கொண்டே, ஆதரவு வாக்குகளை த.வெ.க.வுக்கு மடை மாற்றி... கிடைக்கின்ற எம்.எல்.ஏ.க்களுடன் சென்று த.வெ.க. ஆட்சியில் பங்கேற்பது என்ற மிகக் கேவலமான கான்ஸ்பிரஸி தியரியோடு... அதாவது சதித்திட்டத்தோடு நீங்கள் செயல்பட்டுள்ளீர்கள் என்று நம்பப் படுகின்றது..!

அப்பொழுதே த.வெ.க. வோடு சென்றிருந்தால், உங்களுக்கு அவர் ஐம்பது தொகுதிகளுக்கும் மேலாகக் கூட கொடுத்திருப்பார். தி.மு.க.வுக்கு 28 சீட்டுகள் லாபம். ஆனால் த.வெ.க.விலோ வேட்பாளர்களுக்குக் கூட மரியாதை இல்லை... விஜய்க்கும் விசிலுக்கும் மட்டும் தான் அங்கே மரியாதை. கை சின்னம் நிற்கும் ஐம்பது தொகுதிகளிலும் பெரும்பான்மையாக தி.மு.க.வோ அ.தி.மு.க.வோ தான் அந்தந்த பகுதிகளுக்கு ஏற்றார் போல வென்றிருந்திருக்கும். நிலைமை தலைகீழாக மாறிப் போயிருந்திருக்கும்..!

அதனால் தான் நீங்கள் தி,மு,க,வோடு கூட இருந்தே குழி பறித்திருக்கின்றீர்கள். உறவாடிக் கெடுத்திருக்கின்றீர்கள். சுப்ரமணியபுரம் படத்தில் கஞ்சா கருப்பு காட்டிக் கொடுத்தது போல..?!

காங்கிரஸ் காரர்களே, ஒவ்வொரு மாநிலமாக இழந்து கொண்டு வருகின்றீர்கள். கேரளம் தப்பித்தது என்று நம்ப வேண்டாம், அது கம்யூனிஸ்டுகள் இரண்டு முறை தொடர்ந்து அங்கு ஆண்டதால் உங்களுக்குக் கிடைத்த வெற்றி. மேலும் பா.ஜ.க. அஜெண்டா படி, முதலில் கம்யூனிஸ்டுகளை அழித்த பிறகு தான் உங்கள் தலையில் கை வைப்பார்கள்.

அந்த வகையில், திரிபுரா, மேற்குவங்கத்திற்குப் பிறகு கேரளத்தில் கொஞ்சம் கொஞ்சமாக கம்யூனிஸ்டுகளை முடித்த பிறகு அடுத்ததாக உங்களையும் முடித்து வைப்பார்கள். ஏற்கனவே அங்கு அவர்கள் கணக்கைத் துவங்கி விட்டார்கள்.

காங்கிரஸ் காரர்களே, தி.மு.க. கொள்கை சார்ந்து இயங்குகின்ற இயக்கம். அதனால் உங்கள் துரோகங்கள், சித்து விளையாட்டுக்களை எல்லாம் புறம் தள்ளி விட்டு அல்லது சகித்துக் கொண்டு பொறுமை காத்தது. ஆனால் நடிகர் விஜய் அப்படியல்ல. கொள்கை கோட்பாடுகளுக்காக யாரும் அவருக்கு வாக்களிக்கவும் இல்லை, அவரும் அதற்கு மதிப்பளிப்பவரும் இல்லை.

அ.தி.மு.க.வும் அவருக்கு ஆதரவு அளிக்க தயாராக வாசலில் காத்துக் கொண்டிருக்கின்றது. உங்கள் கதை தமிழ்நாட்டிலும் இனி முடியப்போகின்றது.

### ஐ.பி.எல். போட்டி:

# மெட்ரோ ரயில்களில் ரசிகர்களுக்கு இலவசப் பயணம்!

சென்னை, மே 10-

சென்னையில் நடைபெறும் ஐ.பி.எல். போட்டியைக் காண வரும் ரசிகர்களின் வசதிக்காக, போட்டி நடைபெறும் நாளன்று மெட்ரோ ரயில்களில் இலவசமாக பயணிக்கலாம் என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

நடப்பு ஐபிஎல் தொடரின் 53வது லீக் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் வரும் மே 10ம் தேதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் மோதவுள்ளன.

இதையொட்டி, ரசிகர்களுக்கு தடையற்ற பயண அனுபவத்தை வழங்கும் நோக்கில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சிஎஸ்கே உடன் இணைந்து சிறப்பு ஏற்பாடு செய்துள்ளது.

அதன்படி, மே 10 அன்று நடைபெற உள்ள போட்டிக்கான ஸ்பான்சர் டிக்கெட் (நுழைவுச்சீட்டு) வைத்திருக்கும் ரசிகர்கள், சென்னையில் செயல்பாட்டில் உள்ள எந்த வொரு மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்தும் மைதானத்துக்கு அருகிலுள்ள அரசினர் தோட்டம் மெட்ரோ நிலையத்துக்கு எவ்வித கட்டணமும் இன்றி பயணிக்கலாம்.

ரசிகர்கள் தங்களின் நுழைவுச்சீட்டில் உள்ள பிரத்தியேக க்யூஆர் குறியீட்டை மெட்ரோ நிலையங்களில் உள்ள தானியங்கி நுழைவு இயந்திரத்தில் ஸ்கேன் செய்து பயணத்தைத் தொடங்கலாம்.

இந்தச் சலுகையானது ஒருமுறை சென்று வருவதற்கான இரண்டு நுழைவு மற்றும் இரண்டு வெளியேறுதல்களை உள்ளடக்கியது. மேலும், போட்டி நடைபெறும் நாளன்று மெட்ரோ ரயில் சேவைகள் ஞாயிற்றுக்கிழமை கால அட்டவணையின் படி இயக்கப்படும்.

ரசிகர்கள் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.